அல்லது அசிஸ்டன்ட் கமிஷனர் ரேங்கிலே இருப்பவர்கள் இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள்—அதிலே ஒன்று, இதிலே ஒன்று—என்று தெரிகிறது. அதற்குக் கீழே உள்ள ரேங்குகளில் இருக்கக்கூடிய எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் இவ்வாறு நியமனம் செய்யப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் ரவர்களே, நிர்வாக அலுவலர்கள்—அதாவது எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள்—என்பவர்கள் 4-வது நிலையிலிருந்து சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதிலே இந்த விகிதாச்சாரத்தின்படி எடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்னிடத்தில் இருக்கின்ற குறிப்புகளின்படி பார்த்தால் ஏழெட்டு ஆண்டுகளாகத் தக்கவர்கள் அந்தப் பதவிக்கு மனுப் போடவில்லை என்றுதான் தெரிகிறது. 1971-ஆம் ஆண்டிலே மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்; அதற்குப் பிறகு இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்; 1975-ஆம் ஆண்டு 3-வதில் 12 பேர், 66 இல் 6 பேர் என்று இப்படிப்பட்ட விவரங்கள்தான் இருக்கின்றனவே தவிர, தகுதியானவர்கள் முன்வராததால் அது நிறைவு செய்யப்படாமல் இருக்கிறது. எனவே, அதிலே எந்தவிதமான தடையும் ஆதி திராவிடர்களை அந்த விகிதாச்சாரப்படி சேர்ப்பதிலே இல்லை.

Training Courses or Tourist Guides.

235—(*Q. No. 19517): Thiru. S. RAJARAMAN: Will the Hon Minister for Information and Religious Endowments be pleased to state:

(a) whether the Director of Tourism has sponsored any course for Tourist Guides in Tamil Nadu;

(b) if so, the details thereof, and

(c) the total number of tourist guides trained by the directorate of tourism so far year wise for the last three years?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (a) (b) and (c): விவரமான விடை **அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

** 119-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS